செய்தி வெளியீடு எண் :06 நாள் :03.04.2018

**தேனி மாவட்டம்**
**தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில்**
**மருத்துவ பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கான பட்டமளிப்பு விழா**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப, அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது:-**

**********

தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை அரங்கத்தில் மருத்துவ பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கான 7-வது பட்டமளிப்பு விழா இன்று (03.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில், மருத்துவமனையில் 2012-18-ஆம் கல்வியாண்டில் மருத்துவ பட்டப்படிப்பு படித்து தேர்ச்சி பெற்ற 97 மாணவ, மாணவியர்களுக்கான பட்டங்களை வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில், தமிழக அரசு கிராமப்புற மற்றும் நகரப்புறங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்கள் தரமான மருத்துவ சிகிச்சையினை பெறவேண்டும் என்பதற்காக பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்கள் மற்றும் மருத்துக்கல்லூரிகளை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

மருத்துவ படிப்பு என்பது சிறந்த முறையில் கல்வியினை பயின்று அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு மட்டும் கிடைக்ககூடிய அறிய வாய்ப்பாகும். இம்மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் பயிலும் மாணவ, மாணவியர்கள் வெளி மற்றும் உள்நோயளிகளாக சிகிச்சை பெறுகின்ற பொதுமக்களுக்கு இன்முகத்துடன் மருத்துவ சேவையினை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும். மருத்துவ படிப்பினை முடித்து மருத்துவர்களாக செல்கின்ற மாணாக்கர்கள் அனைவரும் சிறந்த மனிதநேயமிக்க மருத்துவர்களாக பணியாற்றி தமிழக அரசு செயல்படுத்துகின்ற அனைத்து மருத்துவம் சார்ந்த சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கிட வேண்டும்.

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டத்திற்கென்று தனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையை ஏற்படுத்திட ஆணையிட்டார்கள். அதனைத்தொடர்ந்து, 2005-06-ஆம் நிதியாண்டு முதல் தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துமனை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் மூலம் தினந்தோறும் 1500 முதல் 2000 வரையிலான வெளிநோயளிகளும், 1,200 உள்நோயளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் மகப்பேறு சிகிச்சை 85 சதவீதத்திற்கு மேல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த மாதத்தில் எதிர்பாரத விதமாக நடைபெற்ற குரங்கனி காட்டுத்தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக மீட்க்கவும், அவர்களுக்கு உரிய முதலுதவி மருத்துவ சேவை மற்றும் சிகிச்சையினை உரிய நேரத்தில் வழங்கிய தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் பணியாற்றக்கூடிய கல்லூரி முதல்வர், மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், பேராசியர்கள், உதவி பேராசியர்கள், மாணக்கர்கள், செவிலியர்கள் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற மாணவ, மாணவியர்கள் தனித்துவத்துடன் சிறந்த மருத்துவர்களாக விளங்கிட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை முதல்வர் மரு.திருநாவுக்கரசு அவர்கள், துணை முதல்வர் மரு.எழிலரசன் அவர்கள், துணை கண்காணிப்பாளர் மரு.இளங்கோவன் அவர்கள், மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், பேராசியர்கள், உதவி பேராசியர்கள், செவிலியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**